1990 மே 12[

என்ற இரு நாடுகளிலும் சுகாதார வசதி இல்லாத காரணத்தினால் அங்கே உள்ள இந்து மலையாளி மக்கள் அனைவரும் தொட்டில் கட்டிக்கொண்டு தான் துறையூர் வந்து சிகிச்சை பெற்றுச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் அங்கே ஒரு சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, துறையூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை சுமார் 90 ஆயிரம் ஆகும். 30 ஆயிரம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே வீரமச்சான்பட்டி, பெருமாள்பாளையம், செங்காட்டுப்பட்டி ஆகிய 3 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது அது குறித்து எந்தவிதமான செயற் குறிப்பும் அரசிடம் இல்லை.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, துறையூரிலிருந்து பச்சைமலைக்குச் சென்றுவர கிட்டத்தட்ட 15 அல்லது 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அவர்கள் பச்சைமலையிலிருந்து துறையூர் வந்துதான் சிகிச்சை பெற்றுக்கொண்டு சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் அரசு மறுபரிசீலனை செய்து இந்து மலையாளி மக்களுக்கு உதவ அங்கே சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப இதுபோன்ற திட்டங்களைப் படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை

* 6150—திரு எம். முத்தையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு ஆபரேஷன் தியேட்டரும், எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதியும் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆஸ்பத்திரி இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதல்ல, வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆகையினால் தயவுசெய்து இப்போதாவது நம்முடைய அரசு—அங்கே எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டேன்; இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள்; அதுதான் இல்லை என்று சொன்னாலும் அங்கு கூடுதலாக படுக்கை வசதிகளை விஸ்தரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அதை 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்ற செயற் குறிப்பு அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கிறது. கூடியவிரைவில் அரசினுடைய நிதி நிலைக்கு ஏற்ப அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன் வரும்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த படுக்கை வசதிகள் எப்போது விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பளிச்சென்று விளங்குகிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அந்த மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்குப் போதுமான நிலம் இல்லை. அந்த நில வசதியை அவர்கள் ஆர்ஜிதம் செய்து கொடுத்த பின்னர் அதை விரிவு படுத்துவதற்கு படிப்படியாக அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : உங்களுடைய " ration " முடிந்துபோய்விட்டது. (சிரிப்பு).

மருந்தாளுநர்கள்

* 8870—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில் கூடுதலாக மருந்தாளுநர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?